**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க..எண்.2054/ஆ5/2024, நாள்.03/06/2024**

**.....**

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை 2024–2025 ஜுன் 5 பள்ளிகளில் உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடுதல் – தொடர்பாக

**.....**

வேலூர் மாவட் டத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகள் (அரசு / அரசு உதவிபெறும் மற்றும் மெட்ரிக் மேல்நிலை , உயர்நிலை, நடுநிலை மற்றும் தொடக்கப் பள்ளிகள்) சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக தேசியபசுமைப்படை மற்றும் சுற்றுச்சூழல் மன்றங்கள் மூலம் ஜுன் – 5ம் நாளன் று பள்ளிகளில் உலக சுற்றுசூழல் தினத்தைக் கொண்டாடும் விதமாக பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடுவதை ஊக்குவிக்கத் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, அனைத்து வகை அரசு / அரசு உதவிபெறும் மேல்நிலை/ உயர்நிலை/ நடுநிலை / தொடக்கப் பள்ளிகள் மற்றும் மெ ட்ரிக் பள்ளிகளில் , பள்ளிகள் திறந்தவுடன் ஜுன் முதல் வாரத்தில் சுற்றுச்சூழுல் தினம் சார்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தி அதற்கான புகைப்படத்துடன் கூடிய அறிக்கையினை சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி) பள்ளிகளிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையினை இவ்வலுவலகத்தில் 20.06.2024 அன்று மாலை 5.00 மணிக்குள் சமர்பிக்குமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி),
வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
நகல்–
அனைத்து வகை அரசு / அரசு உதவிபெறும் மேல்நிலை/ உயர்நிலை/ நடுநிலை /
தொடக்கப் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.